# تدريس اللغة العربية في المدارس القرآنية بكاتانكودي–الواقع والمأمول

# Teaching Arabic Language in Quran Madrasas at Kattankudy – Opportunities and Strategies

**Supervisor**
*Mr. MSM. Jalaldeen,*
*Senior Lecturer,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

**Researcher**
*Ms. AK. Saajiha,*
*Department of Arabic Language,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

## ملخص البحث

موضوع البحث:تدريس اللغة العربية في المدارس القرآنية بكاتانكودي–الواقع والمأمول–

الحمد لله والصلاة والسلام على رسول الله وعلى آله وأصحباه أجمعين ، أما بعد:فأينما يكون المسلمون في العالم كانت رغبتهم إرسال أطفالهم إلى المدارس القرآنية لقراءة القرآن منذ صغرهم، حيث إنها تعد من أولى المدارس للأطفال وذلك لما يحث الإسلام على وجوب تعلمه على كل مسلم ومسلمة واتباعه في حياتهم. وكما أن المدارس القرآنية تعد مراكز إسلامية لتدريس القرآن والآداب الإسلامية.

ولا يزال عدد من المدارس القرآنية يقوم بهذه المهمة في مدن مختلفة في أنحاء سريلانكا ، ومن تلك المدن مدينة كاتانكودي بمنطقة بارتيكالو من شرق سريلانكا والتي يعيش فيها المسلمون بأغلبية. و فيها عدد من المدارس يقوم بتدريس اللغة العربية للطلبة الدارسين وبعضها تعمل بهذه المهمة تحت إشراف جمعية تنمية المدارس القرأنية وبعضها تعمل مستقلة عنها.وأكثر المدارس القرآنية فيها تستخدم طرقا تقليدية في تدريس اللغة العربية . رغم وجود المدارس الحديثة في تدريس القرآن واللغة العربية في أنحاء سريلانكا ، ولكن نرى أن الطرق التقليدية في تدريس القرآن غير مؤثرة عند الطلاب. وسببها الرئيسي هو تركيز العناية على تدريس اللغة العربية في المدارس القرآنية بمهارة القراءة فقط وعدم الاهتمام في المهارات الأخرى من مهارات التحدث والكتابة والاستماع .

يهدف هذ البحث إلى التركيز على النقاط التالية :

تعريف عن دخول الإسلام في كاتانكودي ونشأة المدارس القرآنية فيها.

دراسة المدارس القرآنية في كاتانكودي إداريا ومنهجيا وأسلوبيا .

عرض الإستراتيجيات الحديثة في تدريس اللغة العربية في المدارس القرآنية فيها.

كما تستخدم الباحثة في هذا البحث المنهج الوصفي التحليلي في جمع المعلومات الأولية من المقابلة والملاحظة والاستبانة ومن المعلومات الثانوية من العمل المكتبي والمجلات والمواقع الإلكترونية.

وقد أسفر البحث عن نتائج من خلال سفر الباحثة إلى المدارس القرآنية بمدينة كاتانكودي،

اتباع الطرق التقليدية في تدريس اللغة العربية في المدارس القرآنية بمدينة كاتانكدي

قلة المعرفة عن الإستراتيجيات الحديثة في تدريس اللغة العربية عند المعلمين.

عدم تدريب المعلمين في كيفية التدريس بالطرق الحديثة

أهمية إدخال المهارات الأربع في تدريس اللغة العربية

الكلمات الدالة: طرق التدريس، كاتانكودي، المدارس القرآنية، الإستراتيجيات، أربع مهارات لغوية

## "கூட்டு ஸகாத் வேலைதிட்டத்தின் கீழ் வறிய மக்களின் வாழ்வாதார நிலை" (10 வருடகாலப் பகுதியினுள் காத்தான்குடி நகரை மையப்படுத்தியதான ஆய்வு)


**Supervisor**
*Mr. HM. Ahamed Hilmy,*
*Lecturer (Prob.),*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

**Researcher**
*Mrs. MAF. Nusra,*
*Department of Islamic Studies,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*



### ஆய்வுச் சுருக்கம்

மாறி வரும் பொருளாதார சூழ்நிலையில் மனித வாழ்வை அலைக்கழிப்பதில் வறுமைப் பிரச்சினையானது மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. இந்த ஏழ்மையும் வறுமையும் இன்று நம் தேசத்துப் பிரச்சினை மட்டுமன்று. அது ஒரு சர்வதேசப் பிரச்சினையாகும். இதனால் இத்தகைய வறுமைப் பிரச்சினையை ஒழிப்பதற்காக இன்று அபிவிருத்தி அடைந்து வரும் எல்லா நாடுகளும் வறுமை ஒழிப்பை முக்கிய இலக்காக கொண்டு அதற்கான பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. எனினும் மனித அறிவே அத்திட்டங்களை வரைவதனால், பெரும்பாலும் அவர்களின் முயற்சிகள் தோல்வியிலே முடிகின்றன. ஆனால் இஸ்லாம் முன்வைக்கும் வறுமை ஒழிப்புத்திட்டமான ஸகாத் வல்ல அல்லாஹ்வினால் வரையப்பட்டுள்ளதால் குறைபாடுகளற்று பூரணத்துவம் வாய்ந்ததாக திகழ்கின்றது. எனவே இந்த ஸகாத் எனும் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் வறிய மக்களின் வாழ்வதாரத்தை முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

'கூட்டு ஸகாத் வேலை திட்டத்தின் கீழ் வறிய மக்களின் வாழ்வாதார நிலை' என்ற தலைப்பில் அமைந்த இவ்வாய்வானது, காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன கூட்டு ஸகாத் நிதியத்தை மையப்படுத்தியதாக மேற்கொள்ளப்படுகின்றது. கூட்டு ஸகாத் நிதியம் தனது கடந்த பத்தாண்டுகளில் மேற்கொண்ட வேலைத்திட்டங்கள் என்ன?, அவை அம்மக்களை சென்றடையவில்லையா?, அங்கு எதிர்நோக்கப்படுகின்ற சவால்கள் என்ன? என்பதை கண்டறிவதே இங்குள்ள ஆய்வுப்பிரச்சினையாக காணப்படுகின்றது. இப் பிரதேச சம்மேளன கூட்டு ஸகாத் நிதியத்தின் நடைமுறைச் செயற்பாடுகளை கண்டறிந்து, கடந்த 10 வருட காலப்பகுதியில் கூட்டு ஸகாத் நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார, சமூக அபிவிருத்தி செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதை நோக்காகக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாய்வில் முதலாம், இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்பு முறைகளைப் பயன்படுத்தி இவ்வாய்வுக்குத் தேவையான தரவுகள் பெறப்பட்டன. முதலாம் நிலைத்தரவுகள் வினாக்கொத்து முறையைப் பயன்படுத்தி பெறப்பட்டன. ஆய்வுப்பிரதேசமானது 6 வலயங்களாக பிரிக்கப்பட்டு நேரடியாக சென்று, நோக்கி மாதிரி நுட்ப முறையின் அடிப்படையில் சுமார் 60 வினாக்கொத்துகளும், ஒவ்வொரு வலய அடிப்படையில் ஒரு வலயத்திற்கு 10 வீதம் என்று 6 வலயங்களுக்கும் வழங்கப்பட்டு தகவல்கள் பெறப்பட்டதுடன் நேர்காணல், அவதானம் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பின்னணியிலும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகள், காத்தான்குடி பிரதேச ஸகாத் நிதியத்தினால் வெளியிடப்பட்ட விண்ணப்ப படிவங்கள், வருடாந்த கணக்கறிக்கைகள், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள், இணையத்தில் மூலம் பெறப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதன் மூலம் பெறப்பட்டுள்ளன. மேற்கண்ட பல தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு ஐந்து அத்தியாயங்களாக பிரிக்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.